# பரதநாட்டியம் - தரம் 10

## பகுதி I

**1. சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. ‘‘வண்டுகள் தேன் குடித்து மயங்கின’’ இதில் வண்டுகளைக் குறிக்க பயன்படும் முத்திரை யாது?
   1. பிரம்மரம் 2. திரிபதாகம் 3. மயூரம் 4. அலபத்மம்
2. பாத்திரப் பிராணன்களில் புத்திக் கூர்மையை குறிக்கும் சமஸ்கிருதச் சொல்?
   1. ஜவக் 2. ரேகா 3. மேதா 4. வஸோ
3. பின்வருவனவற்றில் தாளத்தின் அங்கமாகக் கருதப்படுவது?
   1. நிருத்தம் 2. பல்லவி 3. பாவம் 4. அனுத்ருதம்
4. 35 தாளச்சக்கரத்தில் அதிகூடிய எண்ணிக்கை உடைய தாளம் எது?
   1. திஸ்ரஜாதி ஏகதாளம் 2. சங்கீர்ணஜாதி துருவதாளம் 3. மிஸ்ரஜாதி அடதாளம் 4. கண்டஜாதி ஏகதாளம்
5. நாடக வடிவத்தில் அபிநயிக்கப்படும் தர்மி எது?
   1. நாட்டிய தர்மி 2. நிருத்த தர்மி 3. லோக தர்மி 4. நிருத்திய தர்மி
6. ஆதிசேஷ பகவான் நந்தகோபருடைய மனைவி ரோகிணியின் கர்ப்பத்தில் தோன்றி எடுத்த அவதாரம் ?
   1. கல்கி அவதாரம் 2. வாமன அவதாரம் 3. நரசிம்ம அவதாரம் 4. பலராம அவதாரம்
7. மங்கலவாத்தியம் மற்றும் இராஜ வாத்தியம் என அழைக்கப்படும் இசைக்கருவி?
   1. புல்லாங்குழல் 2. நாதஸ்வரம் 3. மிருதங்கம் 4. தவில்
8. சிற்றுடுக்கையை கையில் வைத்து முழக்கும் இறைவன் யார்?
   1. சிவன் 2. பார்வதி 3. விஸ்ணு 4. பிரம்மா
9. சூரியமூர்த்தி, பொன்னையாவின் புத்திரி ஞானாம்பாள் ஆகியோரைப் பெற்றோராகக கொண்ட வாக்கேயக்காரர்?
   1.பொன்னையாப்பிள்ளை 2.மீனாட்சி சுந்தரம்பிள்ளை 3. இராமையாப்பிள்ளை 4. வடிவேலு
10. குஞ்சரமல்லன் என்ற தலைமைச்சிற்பியால் கட்டப்பட்ட ஆலயம்?
    1.திருப்பதி 2.கங்கைகொண்ட சோழபுரம் 3.தஞ்சை பெருங்கோயில் 4. ஸ்ரீரங்கம்
11. கரையோரப் பிரதேசத்தொழிலை அடிப்படையாகக் கொண்டு ஆடும் கிராமிய நடனம்?
    1.அறுவடை நடனம் 2.கொழுந்து நடனம் 3.குறவர் நடனம் 4.மீனவ நடனம்
12. கோர்வையின் இறுதியில் அமைய வேண்டிய அடவு?
    1.தட்டடவு 2.மகுட அடவு 3.குத்தடவு 4.மெய்யடவு
13. அலாரிப்பில் வரும் கிரிவா பேதம் எது?
    1. திரச்சீனா 2.சுந்தரி 3.பிரகம்பிதா 4.பரிவர்த்திதா
14. ‘‘பட்டாபிஷேகே’’ என்பதன் கருத்து யாது?
    1.ஊஞ்சல் 2.கல்யாணம் 3.முடிசூட்டுதல் 4.பூசை செய்தல்
15. பரதநாட்டிய சம்பிரதாய உருப்படிகளில் இரண்டாவதாக ஆடப்படும் உருப்படி எது?
    1. ஜதீஸ்வரம் 2. அலாரிப்பு 3. வர்ணம் 4.தில்லானா
16. மட்டக்களப்பு உழவர் சமூகத்தால் ஆடப்படும் கூத்து?
    1. பறைமேளக்கூத்து 2.மகிடிக்கூத்து 3. வசந்தன் கூத்து 4.கிழமைக்கூத்து
17. பாரம் மிகுந்த வில்லுடுப்பு, கரப்புடுப்பு என்பவற்றை அணிந்து போர்க்கதை கொண்டு ஆடும கூத்து?
    1. வடபாங்கு 2. தென்மோடி 3. தென்பாங்கு 4. வடமோடி
18. உறவுமுறைகளைக் குறிக்கும் ஹஸ்தம்?
    1. தசாவதாரம் 2. நவக்கிரகம் 3.பாந்தவ்யம் 4.ஜாதி
19. வேத்தியல், பொதுவியல் ஆடல்முறை காணப்பட்ட காலம்?
    1. சங்க காலம் 2. பல்லவர் காலம் 3. சோழர் காலம் 4. பல்லவர் காலம்
20. சங்ககாலத்தில் பெண்களால் ஆடப்படும் கூத்து?
    1. வெறியாடல் 2. குரவை 3. துணங்கை 4. குழு நடனம்

## பகுதி II

1. நீர் கற்ற அலாரிப்பினை தாள, அங்கக் குறியீட்டுடன் எழுதுக.
2. நாட்டுக்கூத்தில் வடமோடி, தென்மோடிக்கு இடையிலான வேறுபாடு பற்றி விளக்கமாக எழுதுக.
3. சிறுகுறிப்பு எழுதுக.
   1. நாட்டியதர்மி 2. பாத்திரப்பிராணன் 3. உடுக்கு
4. பந்தனை நல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் வாழ்க்கை வரலாற்றைக் குறிப்பிடுக.
5. வரலாற்றுக் காலத்தில் சங்க கால நடனக் கலை பற்றி ஆராய்க.
6. பின்வரும் ஹஸ்தங்களின் விநியோகத்தை கருத்துடன் தருக.
   1. அஞ்சலி 2. கடகாவர்த்தனம் 3. புஷ்பபுடம் 4. கற்கடகம்
7. தசாவதாரங்களைக் குறிப்பிட்டு ஒவ்வொரு அவதாரத்தினதும் தோற்றத்திற்கான காரணத்தினை விளக்குக.